# தடையின்மை சான்று

த.இ.சா.எண் : 07/2023
ந.க.எண் : 44/V/2022
நாள் : 10.03.2023

தீயணைப்பு - மீட்புப்பணி நிலையம்
அண்ணாநகர், சென்னை - 30.

பொருள் : தீயணைப்பு (ம) மீட்டுப்பணிகள் துறை - தீயணைப்பு (ம) மீட்டுப் பணிகள் நிலையம் - அண்ணாநகர் - பள்ளிக்கூடம் நிறுவிட / பள்ளிக் கூடத்திற்கு அங்கிகாரம் வழங்கிட தடையின்மை சான்று வழங்குதல் குறித்து.

பார்வை : 1). அரசு ஆணை எண்: 122. பள்ளி கல்வி (2) துறை, நாள்: 14.09.2004.

2). அரசு ஆணை எண்: 123. பள்ளி கல்வி (2) துறை, நாள்: 14.09.2004.

3). 02.03.2023 நாளிட்ட THE PRINCIPAL, CHINMAYA VIDYALAYA என்பவரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பம்.

*******

பார்வையில் காணும் அரசாணை மற்றும் விண்ணப்பத்தின் படி **NO: 5063, Z-BLOCK, BELLY AREA, ANNANAGAR, CHENNAI-600 040** என்ற முகவரியில் நிறுவப்பட்டுள்ள **M/S.CHINMAYA VIDYALAYA SCHOOL** என்ற பள்ளியினை **08.03.2022** அன்று அண்ணாநகர் நிலைய அலுவலர் திரு.க.ஜெயராமன் என்பவரால் ஆய்வு செய்யப்பட்டது. இவ்விடத்தில் இயங்கும் பள்ளிக்கூடத்திற்கு அங்கிகாரம் வழங்கிட தீயணைப்பு (ம) மீட்டுப்பணிகள் நோக்கிலிருந்து யாதொரு தடையும் இல்லை.

அண்ணாநகர் தீயணைப்பு (ம) மீட்டுப்பணிகள் நிலையம்
தேதியுடன் கூடிய முத்திரை

தீயணைப்பு & மீட்புப் பணிகள் நிலையம்
நாள்: 10.03.2023
அண்ணா நகர், சென்னை-30.

நிலைய அலுவலா 10/3/23
தீயணைப்பு & மீட்புப பணிகள் நிலையம்
அண்ணா நகர், சென்னை - 600 030

TO :
THE PRINCIPAL,
M/S.CHINMAYA VIDYALAYA SCHOOL,
NO: 5063, Z-BLOCK, BELLY AREA,
ANNANAGAR, CHENNAI-600 040.

நகல் : மாவட்ட அலுவலர், மத்திய சென்னை மாவட்டம்.

# நிபந்தனைகள்

1. இத்தடையின்மைச்சான்று ஓராண்டுக்கு மட்டுமே செல்லத்தக்கதாகும்.
2. போதுமான தீயணைப்பு கருவிகள் IS 2190:2010 ன்படி பொருத்தப்பட வேண்டும். இந்திய தரநிர்ணய சான்றுடன் தீயணைப்பான்களை கண்ணுக்கு முதன்மையாக கவரும் வகையில் பள்ளியின் ஒவ்வொரு பகுதியிலும் நிறுவ வேண்டும்.
3. முதலுதவி சாதனங்கள் உரிய மருந்துகளுடன் உடனடியாக கிடைக்கும் வகையில் பள்ளிகளில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.
4. எல்.கே.ஜி. மற்றும் யு.கே.ஜி பிள்ளைகளுக்கான வகுப்பறைகள் தரைத்தளத்தில் மட்டும் நடைபெற வேண்டும்.
5. அவசர காலத்தில் பயன்படுத்த கூடிய தொலைபேசி எண்கள் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர்களின் பட்டியல் ஒன்றை பள்ளியின் அறிவிப்பு பலகையில் ஒட்டுவதுடன் கேந்திரமான அனைத்து பகுதிளிலும் தெளிவாக தெரியும் வகையில் அமைக்க வேண்டும்.
6. பழைய மின்கம்பிகள் மற்றும் சாதனங்கள் அகற்றப்பட்டு இந்திய தரநிர்ணய சான்றுடன் புதிய மின் அமைப்புகள் நிறுவப்பட வேண்டும்.
7. அதிக மின்அழுத்தம் கொண்ட மின்கம்பிகள் பள்ளியின் உள்ளோ அதன் அருகாமையிலோ செல்ல கூடாது. எவையேனும் இருப்பின் அவைகளை உடனடியாக அப்புறப்படுத்தப்படவேண்டும்.
8. ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 14-ம் தேதியை தீ பாதுகாப்பு நாளாக ஒவ்வொரு பள்ளியிலும் அனுசரிக்கப்பட்டு அன்றைய தினம் தீ விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் தீ பாதுகாப்பு பயிற்சிகளை தீயணைப்பு-மீட்புப்பணி குழுவினருடன் இணைந்து நடத்த வேண்டும்.
9. அனைத்து தளங்களிலும் அவசரகாலங்களில் விரைவாக வெளியேறும் வகையில் அவசரகால வழி அமைத்திட வேண்டும்.
10. 45 மாணவர்களுக்கு மேல் உள்ள வகுப்பறைகளுக்கு குறைந்தபட்சம் இருவழி கதவுகள் அமைக்கப் படவேண்டும்.
11. அனைத்து கதவுகளும் வெளிப்புறமாக திறக்கும் வகையில் அமைக்கப்படவேண்டும்.
12. கேஸ் பைப் லைன் படிக்கட்டுகள் ஒட்டி அமைக்கக் கூடாது.
13. படிக்கட்டுகளின் அகலம் குறைந்தபட்சம் 30cm, உயரம் 15cm, இருக்க வேண்டும்.
14. மாடிப்படிகள் மற்றும் வெளியேறும் வழிகளில் உள்ள விளக்குகள் தனிமின்சுற்றுடன் அமைக்கப்படவேண்டும்.
15. Miniature Circuit Breakers/Earth Leakage Circuit Breakers நிறுவப்படவேண்டும்.
16. உரிய பாதுகாப்பு முறையுடன் கட்டிடத்தில் இடிதாங்கி நிறுவப்படவேண்டும்.

மேற்குறிப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அரசு விதிமீறல்கள் ஏதேனும் பூர்த்தி செய்யப்படவில்லை எனில் வழங்கப்பட்ட தடையின்மைச்சான்று தானாக ரத்தாகிவிடும் என தெரிவிக்கப்படுகிறது.

நிலைய அலுவலர் 10/3/23

தீயணைப்பு & மீட்பு பணிகள் நிலையம்
அண்ணா நகர், சென்னை - 600 030